DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 4/2013

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வீரமணி |
| Father / Husband Name | கன்னியப்பன் |
| Village | பெரும்பேர் கண்டிகை |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **25.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தொழுப்பேடில் வசித்து ஆட்டோ ஓட்டி செய்து வருகிறேன். சாட்சி கஜேந்திரனை தெரியும். 15 ம் தேதி 8 வது மாதம் வருடம் ஞாபகம் இல்லை. தொழுப்பேடு பேருந்து நிலையத்தில் நான் என் நண்பர்களும் நின்று கொண்டிருந்தபோது திண்டிவனத்தில் இருந்து சென்னை நோக்கி வந்த இ ணோவா கார் சண்முகம் என்பவர் மீது வேகமாக மேம்பாலத்தில் இருந்து கீழாக வந்து மோதி விபத்து ஏற்படுத்தியது. ஆஜர் எதிரிதான் மேற்படி காரை ஓட்டிய நபர் ஆவார். பின்னர் நான் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** விபத்து நடந்த மறுநாள் மாலை 3.30 மணியளவில் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். நானும் கஜேந்திரனும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** நான் சமத்துவபுரத்தில் எவ்வளவு வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் சுமார் 15 வருடங்களாக வசித்து வருகிறேன். விபத்து நடந்த சமயத்தில் தான் நான் சமத்துவபுரத்தில் குடியேரினேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும் போது என்னுடம் சுமார் 5 நபர்கள் இருந்த விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடம் கையொப்பம் செய்த கஜேந்திரன் என்பவர் ஆம்புலன்ஸ் வாகனத்தின் ஓட்டுநர் என்றால் சரிதான். போலிசார் என்னை விபத்து நடந்த மறுநாள் விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கியபோது கஜேந்திரன் என்பவர் இல்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் இருந்தது என்றால் எனக்கு படிக்க தெரியாது என்பதால் என்னுடன் இருந்தவர்கள் படித்து சொன்னார்கள். விபத்து நடந்த இடத்திற்கும் நான் இருந்த இடத்திற்கும் சுமார் 10 அடி தூரம் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவரின் கவனக்குறைவினால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து தேசிய நெடுஞ்சாலையில்

நடந்து என்றால் சரிதான். பாதசாரிகள் சாலையை கடப்பதற்கு பாதை இல்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் போலிசாருக்கு பவ்யப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

25/11/12

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 4/2013
Miscellaneous :
Sessions : PW 6
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கஜேந்திரன் |
| Father / Husband Name | கன்னியப்பன் |
| Village | பெரும்பேர் கண்டிகை |
| Taluk | மதுராந்தகம். |
| Age | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **25.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பெரும்பேர்கண்டிகையில் வசித்து ஆம்புலன்ஸ் ஓட்டி வருகிறேன். சாட்சி வீரமணியை தெரியும். 2015 ம் வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனக்கு விபத்து தொழுப்பேடு பேருந்து நிலையம் அருகே சென்னைக்கு சென்ற இணோவா கார் விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்தில் அடிப்பட்ட சண்முகம் என்பவரை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மறுநாள் இரவு 7.00 மணிக்கு நான் தொழுப்பேட்டில் இருக்கும் போது போலிசார் என்னிடம் வெள்ளை தாளில் கையொப்பம் கேட்டார்கள் மருத்துவமனையில் அவரை சிகிச்சையில் சேர்த்ததற்காக கையொப்பம் கேட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 15.08.2011 ம் தேதி மாலை 5.30 மணிக்கு நான் தொழுப்பேடு ஆட்டோ ஸ்டேண்டில் இருந்தபோது சண்முகம் என்பவரும் அவரது மனைவி முனியம்மாள் என்பவரும் GST சாலையை கடக்கும் போது திண்டிவனத்தில் இருந்து சென்னை நோக்கி ஆஜர் எதிரி இணோவா காரை அதிவேகமாகவும் ஆஜாதக்கரதையாகவும் ஓட்டிவந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. 16.08.2011 ம் தேதி மாலை 5.40 மணிக்கு நானும் வீரமணி என்பவரும் டீக்கடையில் இருந்தபோது போலிசார் முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமாக போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள் என்றால் ஆமாம். அதில் நானும் வீரமணியும் சாட்சி கையொப்பம் செய்தோமா என்றால் ஆமாம். அந்த கையொப்பம் தான் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்றால் ஆமாம். மேற்படி விவரங்களை தான் போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால் ஆமாம்.

கஜேந்திரன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்றால் எனக்கு படிக்க தெரியாது. போலிசார் என்னை இந்த விபத்து குறித்து எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை டோல்கேட் அருகே நான் ஆம்புலன்ஸ் நிறுத்தி வைத்திருக்கும் இடத்தில் விசாரித்தார்கள். என்னுடம் கையொப்பம் செய்த வீரமணி என்பவரை போலிசார் விசாரித்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

க.ரவிச்சந்திரன்

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

25/11/15

Judicial Magistrate No.II
Madurantakam